**எஹெலியகொட பிரதேச சபையி - 2023**

-----------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எஹெலியகொட பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயற்பாட்டு தொடற்பான கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய கூற்றுடன் கூடிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு எஹெலியகொட பிரதேச சபையின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்படும் கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாக மற்றும் நியாயமாக வெளிப்படுத்துகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள், பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு தரநியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்:

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கெல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும்

போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றது எனவும்,

- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,

- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

## 1.5 ஏனைய சட்டரீதியான தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தில் கீழே குறிப்பிட்ட தேவைப்பாடுகள் சம்பந்தமாக விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டன.

(அ) பிரதேச சபையின் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்படுகளுக்கு இணங்க முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட சிபாரிசுகளானவை சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அட்டுறு செலவுகள் ரூபா 265,981 கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்தின் இறுதி கணக்கின் போது சீர் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |
| (ஆ) | நிலையான சொத்துக்களின் கீழ் வருகின்ற ரூபா 764,520 ஆன செலவுகள் மூலதனமாக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (இ) | 06 கணக்கீட்டு விடயங்களின் நிதி கூற்றுக்களின் பிரகாரமான மீதி மற்றும் உபயோகப்படுத்தப்பட்ட ஆவணங்களின் பிரகாரமான மீதி என்பவற்றுக்கிடையில் ரூபா 85,709,469 வேறுபாடொன்று காணப்படுகிறது. | 2024 ஆம் வருட கணக்குகளின் போது சீர் செய்யப்படும். | சரியாக கணக்கிடப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்விற்காக எழுத்துமூலச் சான்றுகள் இல்லாமை

| விடயம் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 08 கணக்கீட்டு விடயங்களில் காணப்பட்ட ரூபா 163,610,295 க்கு பதிலாக உப பதிவேடு மற்றும் ஆரம்பகட்ட ஆவணங்கள் காணப்படாதிருந்ததுடன் வைப்பு கணக்குகளில் காணப்படுகின்ற ரூபா 8,842,547 வரவு மீதி இனம் காணப்பட்டு சீர் செய்யப்பட்டிருக்க வில்லை. | நிலையான சொத்துக்களை பரிசீலித்து பதிவிற்கு உட்படுத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் 2024 ஆம் வருட கணக்குகளை தயாரிக்கும் போது வைப்பு கணக்குகளின் மீதி சீர் செய்யப்படும். | உறுதிப்படுத்துவதற்கு சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

### 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கான இணக்கமின்மைகள்**

| இணக்கமின்மை | சபையின் கருத்துரை | சிபார்சுகள் |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 371(5) பிரகாரம், 1995ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் வரையிலான காலத்தினுள் 41 சந்தர்ப்பங்களில் பெற்றுக் கொடுக்கப்பட்ட ரூபா 1,902,321 முற்பணங்கள் மீள செலுத்தப்பட்டிருக்கவில்லை. | 1993ஆம் வருடத்திலிருந்து 2009 ஆம் வருடம் வரை செலுத்தப்படாது உள்ள முற்பணங்களை நீக்குவதற்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள மற்றும் 2010 ஆம் வருடத்தில் இருந்து 2019 வரையான முற்பணங்களை மீள செலுத்துவதற்கு உரிய நடவடிக்கைகள் இடம் பெற்று வருகின்றன. | நிதி பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 37,583,957 தொகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை மிகைத்த வருமானம் ரூபா 2,070,807 ஆகும்.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் என்பன

செயளாலரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவள்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம், நிலுவை வருமானம் என்பன தொடர்பான தகவல்கள் கீழே தரப்படுகின்றன.

| | 2023 | | | | 2022 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை | மதிப்பீடு செய்யப்பட்ட வருமானம் | பட்டியலி டப்பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறான மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 10,029,000 | 9,479,891 | 11,816,631 | 24,400,450 | 8,561,500 | 10,595,823 | 8,778,931 | 26,327,278 |
| வாடகை | 11,652,500 | 12,285,671 | 12,088,896 | 1,313,907 | 12,107,800 | 11,873,166 | 11,742,288 | 1,282,271 |
| உத்தரவுப் பத்திரக் கட்டணம் | 1,257,600 | 936,780 | 936,780 | 1,000 | 1,072,600 | 725,135 | 723,885 | 5,250 |
| ஏனைய வருமானம் | 9,926,100 | 11,043,888 | 9,332,714 | 3,258,189 | 7,378,300 | 7,233,149 | 6,248,096 | 1,961,071 |
| | 32,865,200 | 33,746,230 | 34,175,021 | 28,973,546 | 29,120,200 | 30,427,273 | 27,493,200 | 29,575,870 |

### 2.2.2 வருமானங்களை சேகரிக்கும் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2023 டிசம்பர் 31 ஆம் திகதியில் ரூபா 23,616,980ஆன நிலுவை வீத வரி மற்றும் ஏக்கர்வரி மீதியினுள் 05 வருடங்களை விட பழைய ரூபா 16,903,961 மீதியொன்று காணப்படுகின்றது. | நடமாடும் சேவை வேலை திட்டம் ஒன்று நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது. | நிலுவை வருமானங்கள் தாமதமின்றி சேகரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 01 முதல் 03 வருட காலம் வரையான நிலுவையாக உள்ள கடை வாடகை, வாராந்த சந்தை மற்றும் நடைபாதை வியாபார கட்டணம் ரூபா 1,111,393 அறவிடப்பட்டிருக்கவில்லை. | நிலுவை பணத்தை அறவிட்டுக் கொள்வதற்கு ஒப்பந்தத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |
| (இ) | நீதிமன்ற தீர்ப்பின் பிரகாரம் எஹெலியகொட வாராந்த சந்தையின் 2012 ஆம் வருடத்திற்கான நிலுவையாக உள்ள குத்தகை வாடகை 2016 ஏப்ரல் மாத அளவில் செலுத்தி நிறைவு செய்யப்பட்டிருக்கவேண்டிய | இது தொடர்பாக அவிஸ்ஸாவேல்ல மாவட்ட நீதிமன்றத்தினால் சட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | -மேற்படி- |

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | போதிலும் ரூபா 180,000 தொடர்ந்தும் அறவிடப்படவேண்டிக் காணப்பட்டது. இருப்பினும் இது சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு அறிவிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஈ) | 14 தொலை தொடர்பு கோபுரங்களுக்கான 2004 - 2021 காலத்துக்கான வியாபார வரி அறவிடப்படாததன் காரணமாக ரூபா 525,000 வருமானமொன்று இழக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் கட்டணங்களை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். | -மேற்படி- |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் கீழ் விதிக்கப்பட வேண்டியிருந்த 30 துணைச் சட்டங்களில் 28 சட்டங்கள் விதிக்கப்பட்டிருக்கவில்லை. | அதற்கான நடவடிக்கை மேற் கொள்ளப்படுகின்றது. | பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப் படல் வேண்டும். |

### 3.2 சுற்றாடல் பிரச்சினைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார பிரதேசத்தில் உள்ள 21 நீர் மூலாதாரங்களின் நீர் பாவனைக்கு பொருத்தமற்றதாக பிரதேசத்தின் சுகாதார வைத்திய அதிகாரிகளினால் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் அது தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | பொருத்தமற்றதாக காண்பிக்கப்பட்ட இடங்களுக்கு குளோரின் இடுவதற்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. | நீர் மூலாதாரங்களை சுத்தமாக்குவதற்கு துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | எஹெலியகொட சந்தை காணியில் உள்ள மலசல கூடத்தின் கழிவு சேகரிப்புத் தாங்கி 2019 ஆம் வருடத்திலே ரூபா 375,000 விற்கு மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள் முறையாக மேற்கொள்ளப்படாததன் காரணமாக 2023 ஆம் வருடத்திலே ரூபா 171,393 விற்கு மீண்டும் திருத்தங்களை மேற்கொள்வதற்கு நேர்ந்தது. அத்தோடு 2013 மற்றும் 2014 ஆம் வருடங்களிலே கிடைக்கப் | மலக்கழிவுகள் வாடகை வாகனமொன்றின் மூலம் நீக்கப்படுவதற்கு நேர்ந்துள்ளது. தற்போது களஞ்சிய தாங்கிக்கு மலக்கழிவுகளை எடுத்துச் செல்லும் குழாய் கட்டமைப் போன்றின் திருத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்பு என்பன மேற்கொள்ளப்பட் வேண்டியதுடன் சபையிடம் காணப்படுகின்ற சொத்துக்கள் ஆக்கபூர்வமாக உபயோகப்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பெற்ற 02 கலி பவுசர்கள் கிடைக்கப் பெற்ற நாள் முதல் பழுதடைந்து செயற்பாடின்றி காணப்பட்ட போதிலும் 2022 மற்றும் 2023 ஆம் வருடங்களிலே ரூபா 148,000 செலவிட்டு தனியார் கலி பவுசர் சேவையை பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. | | |

### .3 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் வருடத்தில் நிர்மாணிக்கப்பட்ட மதில் ஒன்று மற்றும் கேட் ஒன்றும் தலைவரின் தீர்மானத்தின் பிரகாரம் நீக்கப்பட்டதனால் ரூபா 252,631 விளைவற்ற செலவொன்று நேர்ந்திருந்தது. | இது பொதுச்சபையின் தீர்மானத்தின் படி மேற்கொள்ளப்பட்டதாகும். அதற்காக கேட் மற்றும் மதிலின் பகுதி ஒன்று நீக்கப்பட்டது. | அபிவிருத்தி நடவடிக்கைகள் பயன் உறுதியாக திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

### 3.4 வாகனங்களின் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தலைவரினால் எடுத்துச் செல்லப்பட்ட சபைக்கு சொந்தமான கெப் வாகனம் ஒன்று 2022 ஆம் வருடத்திலே விபத்துக்குள்ளாகி இருந்தது. அது தொடர்பான விசாரனை சபையின் அறிக்கையின் பிரகாரம் அது கடமையின் நிமித்தம் நிகழ்ந்ததா என்ற விடயம் உறுதிப்படுத்த முடியாது எனக் கூறப்பட்டிருந்தது. தலைவரின் வாய்மொழி ஒன்றை பெற்றுக் கொள்வதற்காக சமூகமளித்திருக்கவில்லை. | தலைவரிடம் காரணம் கேட்ட சமயத்தில் இது தொடர்பாக எதுவும் ஞாபகம் இல்லை என தெரிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | நிதிப் பிரமானத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |